பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

19 08 2026 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியாவில் அதிக முதலீடுகளை மேற்கொள்ளுமாறு ஜப்பான் தொழிலதிபர்களுக்கு மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் அழைப்பு விடுத்துள்ளார்.
- தேசிய தேர்வு முகமையான NTA தேர்வுத்தாள் தயாரிப்பு குழுவில் இருந்து 600 நிபுணர்களை நீக்கியுள்ளது.
- முறைகேடுகள் காரணமாக ரத்து செய்யப்பட்ட 44 பணி நியமன தேர்வுகள் குறித்த பட்டியலை ஜார்கண்ட் மாநில அரசு வெளியிட்டுள்ளது.
- டாமன் கடற்பகுதியில் படகு பழுதானதால் உயிருக்கு போராடிய 9 மீனவர்களை இந்திய கடலோர காவல்படையினர் பத்திரமாக மீட்டனர்.
- உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்திய மகளிர் அணி 6-1 என்ற கோல் கணக்கில் தென்னாப்பிரிக்க அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியாவில் அதிக முதலீடுகளை மேற்கொள்ளுமாறு ஜப்பான் தொழிலதிபர்களுக்கு மத்திய வர்த்தகம் மற்றம் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் அழைப்பு விடுத்துள்ளார்.

புதுதில்லி வந்துள்ள ஜப்பான் பிரதிநிதி குழுவினர் மத்தியில் பேசிய அவர், இந்தியா - ஜப்பான் இடையேயான நல்லுறவின் முக்கியத்துவம் மற்றும் உறுதியான வளர்ச்சி குறித்து எடுத்துரைத்தார்.

அமைதி, முன்னேற்றம் மற்றும் இந்தோ-பசிபிக் பகுதியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியில் இரு நாடுகளின் பொதுவான விருப்பம் உள்ளிட்ட விஷயங்களை அமைச்சர் அப்போது பகிர்ந்துகொண்டார்.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் உள்ள தொழில் வளங்கள் குறித்தும் எடுத்துக் கூறிய திரு. பியூஷ் கோயல், அன்னிய நேரடி முதலீட்டில் ஜப்பான், இந்தியாவின் 5வது பெரிய நாடாக உருவெடுத்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து முதலீடுகள் இந்தியாவில் மேற்காள்ளப்பட வேண்டும் என்றும் திரு. பியூஷ் கோயல் அழைப்பு விடுத்தார்.

<<<<>>>>

தென்மண்டல முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்றிரவு சென்னை வருகிறார்.

சென்னையை அடுத்த கோவளத்தில் தமிழ்நாடு, கேரளம் உள்ளிட்ட தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் கலந்துகொள்ளும் மாநாடு திரு. அமித் ஷா தலைமையில் நாளை நடைபெற உள்ளது.

இதற்காக இன்றிரவு தனி விமானத்தில் திரு. அமித் ஷா வர இருப்பதையொட்டி சென்னை விமான நிலையம், கோவளம் உள்ளிட்ட பகுதிகளில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சருக்கு அளிக்க வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் விமான நிலைய வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

காவல்துறை உயரதிகாரிகள், விமான நிலைய உயரதிகாரிகள் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

விமான நிலையத்தில் இருந்து கோவளம் வரை சாலை மார்க்கமாக உள்துறை அமைச்சர் பயணிப்பதால் சாலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வது குறித்தும் இந்தக் கூட்டத்தில் முடிவுகள் எடுக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தேசிய தேர்வு முகமையான NTA தனது தேர்வுத்தாள் குறித்த குழுவில் இருந்து 600 நிபுணர்களை நீக்கியுள்ளது.

NTA நடத்தும் தேர்வுகளுக்கு முன்பாக அதனை நான்கு நிலைகளில் ஆய்வு செய்வதற்கு ஏதுவாக புதிய நிபுணர்களை குழுவில் இணைப்பதற்கான பணிகளையும் தேசிய முகமை தொடங்கியுள்ளது.

மத்திய கல்வியமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தலைமையில் நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் நிபுணர்களை சேர்ப்பது குறித்து, அமைச்சரிடம் NTA தலைமை இயக்குநர் விரிவாக எடுத்துரைத்தார்.

*அடுத்த மூன்று வாரங்களுக்குள் 25 அலுவலர்களை தேசிய தேர்வு முகமையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதன் அலுவலகம், மத்திய தொழிலக பாதுகாப்பு படையினரின் பாதுகாப்புடன் புதிய கட்டிடத்திற்கு மாற்றம் செய்யப்பட இருப்பதாகவும் அமைச்சரிடம் எடுத்துரைக்கப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

<<<<>>>>

*முறைகேடுகள் காரணமாக ரத்து செய்யப்பட்ட 44 பணி நியமன தேர்வுகள் பட்டியலை ஜார்கண்ட் மாநில அரசு வெளியிட்டுள்ளது.*

*ஜார்கண்ட் மாநிலத்தில் அரசுப் பணியாளர் தேர்வுகளில் நடைபெற்ற முறைகேடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் நடத்திய தொடர் போராட்டத்தையடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*கடந்த 2014ஆம் ஆண்டு முதல் ஜார்கண்ட் மாநில தேர்வாணையம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் தேர்வுகளை நடத்திய DSR Data Processing நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்பட்ட தேர்வுகளும் ரத்து செய்யப்பட்டிருப்பதாக ஜார்கண்ட் மாநில அரசு தெரிவித்துள்ளது.*

*மருந்து ஆய்வாளர்கள், உதவிப் பேராசிரியர்கள், துணை ஆட்சியர்கள், பல் மருத்துவர்கள், உதவிப் பொறியாளர்கள், உரிமையியல் நீதிபதிகள், வனச்சரக அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களுக்கு நடத்தப்பட்ட தேர்வுகளும் ரத்து செய்யப்பட்டதில் அடங்கும் என்று ஜார்கண்ட் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

<<<<>>>>

*டாமன் கடற்பகுதியில் படகு பழுதானதால் உயிருக்கு போராடிய 9 மீனவர்களை இந்திய கடலோர காவல்படையினர் பத்திரமாக மீட்டனர்.*

*படகு மூழ்கிக்கொண்டிருப்பதாக கடலோர காவல்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து, டாமன் விமான தளத்தில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் சம்பந்தப்பட்ட பகுதிக்கு விரைந்து சென்ற கடலோர காவல் படையினர் மீனவர்களை பத்திரமாக மீட்டதாக கடலோர காவல்படை செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

காயமடைந்த 3 மீனவர்கள் உடனடியாக டாமனில் உள்ள மருத்துவமனைக்கு முதலுதவி சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அந்த செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

மணிப்பூரில் மாவோயிஸ்ட் அமைப்பைச் சேர்ந்த 46 பேர் ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்தனர்.

இம்பாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு. Yumnam Khemchand Singh முன்னிலையில் அவர்கள் சரணடைந்தனர்.

மணிப்பூரில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகளின் ஒரு பகுதியாக சட்டவிரோதமாக வைத்துள்ள ஆயுதங்களை ஒப்படைத்து மறுவாழ்வு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று முதலமைச்சர் ஏற்கனவே அழைப்பு விடுத்திருந்தார்.

அதன்படி சரணடைந்த 46 பேருக்கும் அவர் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டார்.

மாநில அரசின் மறுவாழ்வு நடவடிக்கையாக சரணடைந்தவர்களுக்கு தலா 4 லட்சம் ரூபாய் நிரந்தர வைப்பு நிதியும், 36 மாதங்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையும் வழங்கப்படும் என்று திரு. Yumnam Khemchand Singh தெரிவித்தார்.

<<<<>>>>

சிரியாவின் வடமேற்கு மாகாணமான Idlib பகுதியில் உள்ள Abu Buhar விமானப் படைத்தளத்தின் மீது இஸ்ரேல் வான்வெளித் தாக்குதல் நடத்தியுள்ளது.

விமானப் படைத்தளத்தின் ஓடுபாதையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும், இதில் பலத்த சேதம் ஏற்பட்டபோதிலும் உயிரிழப்புகள் ஏற்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

துருக்கி நாட்டின் ராணுவப் படைகளை தனது விமானப் படைத்தளத்தில் நிலை நிறுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், விதிகளை மீறி சிரியா செயல்பட்டதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மத்திய ஆப்பிரிக்க குடியரசின் மேற்குப் பகுதியில் தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் 30 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். மேலும் பலர் சுரங்கத்திற்குள் சிக்கிக்கொண்டுள்ளனர்.

*Nana-Mambere மாகாணத்தில் இந்திய நேரடிப்படி இன்று அதிகாலை 3 மணியளவில் விபத்து ஏற்பட்டதாகவும், தொழிலாளர்கள் பணியில் இருந்தபோது சுரங்கப் பகுதி தகர்ந்து விழுந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*

*அந்தப் பகுதியில் மீட்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், காயமடைந்த தொழிலாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.*

*<<<<>>>>*

*குழாய்கள் மூலமான இயற்கை சமையல் எரிவாயு இணைப்புகளை பாதுகாப்பான மற்றும் குறைந்த விலையில் வழங்குவதற்கான ஊக்கத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.*

*இந்த திட்டம் அடுத்த மாதம் முதல் தேதியில் இருந்து நடைமுறைக்கு வரும் என்றும், அதிக எண்ணிக்கையிலான குடும்பங்கள் குழாய் வழி இயற்கை எரிவாயுவை விரைவில் பயன்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக மத்திய பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*தற்போது நாடு முழுவதும் ஒரு கோடியே 74 லட்சம் உள்நாட்டு குழாய் வழி சமையல் எரிவாயு இணைப்புகள் உள்ளதாகவும், பயன்பாட்டிற்கு கொண்டுவராத இணைப்புகளை செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*புதிய பகுதிகளுக்கு குழாய் வழி எரிவாயு கட்டமைப்பை விரிவுபடுத்தவும், நகர எரிவாயு விநியோக நிறுவனங்களை ஊக்குவிக்கவும் இந்தப் புதிய திட்டம் வழிவகுக்கும் என்று பெட்ரோலிய அமைச்சக செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*<<<<>>>>*

*உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்திய மகளிர் அணி - தென்னாப்பிரிக்க அணியை 6-1 என்ற கோல் கணக்கில் வென்றது.*

*நெதர்லாந்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இந்திய அணி இடம்பெற்றுள்ள டி பிரிவில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.*

*இதனிடையே இந்திய ஆடவர் அணி இன்று நடைபெறும் ஆட்டத்தில் பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.*

*<<<<>>>>*

*உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லக்ஷ்யா சென் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் இவர், ஆஸ்திரேலியாவின் Collin's Filimon-ஐ 16-21, 21-8, 21-4 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.*

*மகளிர் இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் இந்தியாவின் Treesa Jolly - Gayatri Gopichand இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.*

*இந்த இணை நேற்ற நடைபெற்ற ஆட்டத்தில் அமெரிக்காவின் Lauren Lam - Allison Lee இணையை 21-15, 21-12 என்ற செட் கணக்கில் வென்றது.*

*<<<<>>>>*

*துரந்த் கோப்பை கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் தில்லி அணி - ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது. இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.*

*<<<<>>>>*

*தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் கோவை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் சேப்பாக் அணியை வென்றது.*

*சேப்பாக்கில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய சேப்பாக் அணி 19 புள்ளி 3 ஓவரில் 167 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*168 ரன் என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய கோவை அணி 18 புள்ளி 5 ஓவரிலேயே 5 விக்கெட் இழப்புக்கு 171 ரன் எடுத்து வெற்றி பெற்றது.*

*இன்றிரவு மணி 7.30க்கு நடைபெறும் ஆட்டத்தில் திண்டுக்கல் அணி - திருச்சி அணியை எதிர்கொள்கிறது.*

*<<<<>>>>*